# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

**நான்காம் காலாண்டு, 2018**

## கிறிஸ்துவில் நம் ஒற்றுமை


1 சிருஷ்டிப்பும் விழுகையும் (செப்டம்பர் 29–அக்டோபர் 5) ....... 6

2 ஒற்றுமை குலைவுக்கான காரணங்கள் (அக்டோபர் 6–12) ....... 16

3 'அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்' (அக்டோபர் 13–19) ....... 26

4 ஒற்றுமைக்கான திறவுகோல் (அக்டோபர் 20–26) ....... 36

5 ஆதிகாலச் சபையில் ஒற்றுமை அனுபவம் (அக்டோபர் 27–நவம்பர் 2) ....... 46

6 ஒற்றுமை குறித்த உருவகங்கள் (நவம்பர் 3–9) ....... 56

7 சச்சரவுகள் எழும்போது (நவம்பர் 10–16) ....... 66

8 விசுவாசத்தில் ஒற்றுமை (நவம்பர் 17–23) ....... 76

9 ஆணித்தரமான ஆதாரம் (நவம்பர் 24–30) ....... 86

10 முறிந்த உறவுகளும் ஒற்றுமையும் (டிசம்பர் 1–7) ....... 96

11 ஆராதனையில் ஒற்றுமை (டிசம்பர் 8–14) ....... 106

12 சபை அமைப்பும் ஒற்றுமையும் (டிசம்பர் 15–21) ....... 116

13 ஒற்றுமை இறுதியாகப் புதுப்பிக்கப்படுதல் (டிசம்பர் 22–28) ....... 126



பாட ஆசிரியர்

**டெனிஸ் ஃபோர்டின்**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**



# கிறிஸ்துவில் நம் ஒற்றுமை

பூமியிலுள்ள தேவனுடைய குடும்பம்தான் சபை. சேவைசெய்யவும், வேத ஆராய்ச்சி செய்யவும், ஆராதிக்கவும் சபையாக ஒன்றுகூடுகிறார்கள். இயேசுவே சபையின் தலைவர்; நம் மீட்பர். இந்த எண்ணத்தோடு, இரட்சிப்பின் நற்செய்தியை எல்லா மக்களுக்கும் கொண்டுசெல்லவே சபை அழைக்கப்பட்டுள்ளது.

செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபையின் 12ஆம் மூலக்கோட்பாட்டின் ஒரு பகுதி பின்வருமாறு சொல்கிறது: இயேசு கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக அறிக்கை செய்கிற விசுவாசக்குடும்பம்தான் சபை. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் வாழ்ந்த தேவனுடைய மக்கள்போலவே நாமும் உலகிலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம்; ஆராதனைசெய்யவும், அந்நியோந்நியமாக இருக்கவும், வேதாகம வழியில் நடத்தப்படவும், திருவிருந்தில் கலந்துகொள்ளவும், மனிதருக்குச் சேவைசெய்யவும், நற்செய்தியை உலகம்முழுவதிலும் அறிவிக்கவும் நாம் ஒன்றுகூடுகிறோம்.

சபை என்றால் என்ன? யாரெல்லாம் சபைக்குச் சொந்தமானவர்கள்? சபை குறித்த விளக்கத்திலேயே இந்தக் கேள்விகளுக்கான பதில் ஓரளவுக்கு உள்ளது.

சபை என்பது உள்ளூர் விசுவாசிகள் இயேசுவுக்குள் ஒன்றுகூடுகிற ஓர் இடம். அவர்கள் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து, ஆராதனைசெய்யவும் சேவைசெய்யவும் கூடிவருகிறார்கள். வீடுகளிலோ, பெரிய தனிக்கட்டடங்களிலோ அவர்கள் கூடலாம். ரோமர் 16:10,11. சபை என்றால், மக்கள்தானே ஒழிய, கட்டடங்கள் அல்ல.

புதிய ஏற்பாட்டில், ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்ந்த விசுவாசக்கூட்டத்தாரைச் சுட்டிக்காட்டவும் சபை என்ற சொல் சிலசமயங்களில் பயன்பட்டுள்ளது. கலாத்தியாவிலிருந்த சபைக்கு பவுல் பேசியபோது, அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களிலும் சிறுநகரங்களிலும் இருந்த பல தனிச்சபைகளை ஒன்றுசேர்த்து அவர் சபை என்கிறார். (கலா 1:2; 1பேதுரு 1:1). ஒரு குறிப்பிட்ட சபை அமைப்பையும் சபை என்று குறிப்பிடுகிறோம். தங்கள் நம்பிக்கைகள் மற்றும் பாரம்பரியங்கள்நிமித்தம் குறிப்பிட்ட பெயரால் தங்களை அழைத்துக்கொள்பவர்களையும் சபை என்கிறோம்.

ஆனாலும் இந்த விளக்கங்கள் எதுவுமே முழுமையாக இருக்காது. சபை என்றால் பூமிமுழுவதிலுமுள்ள தேவனுடைய மக்களைக் குறிக்கிறது. கிறிஸ்துவுக்கு உண்மை யான சீடர்கள் பல்வேறு சபைகளில் இருக்கிறார்கள். (இறுதி நெருக்கடிக் காலத்தில் அவர்களில் அநேகர் தேவனுடைய மீதமான சபையில் சேருவார்கள், வெளி 18:1-4). ஆனாலும், இந்தக் காலாண்டில் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபை எனும் நம்மு டைய சபையைப் பற்றியும், கிறிஸ்துவுக்குள்ளான ஒற்றுமை நமக்கு எவ்வாறு முக்கிய மானதாக இருக்கிறது என்பதையும் பார்க்கப்போகிறோம்.

“கிறிஸ்துவின் சரீரத்தில் ஒற்றுமை” என்கிற 14ம் மூலக்கோட்பாடு பின்வருமாறு கூறுகிறது: “பல்வேறு அங்கத்தினர்கள் அடங்கிய ஒரே சரீரம்தான் சபை: அதில் பல் வேறு தேசத்தாரும், பல்வேறு இனத்தாரும், பல்வேறு மொழியினரும், பல்வேறு மக்களும் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் நாம் புதுச் சிருஷ்டிகள்; இனமோ, கலாச்சாரமோ, கல்வியோ, தேசமோ, ‘உயர்ந்தவர்-தாழ்ந்தவர், ஏழை-பணக் காரர், ஆண்- பெண்’ என்கிற வித்தியாசமோ நம்மைப் பிரிக்கமுடியாது. கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் சமம். ஒரே ஆவியானவர்மூலமாக தேவன் நம்மைத் தம்மோடும், உடன்மனிதரோடும் இணைத்துக் கட்டியுள்ளார். பட்சபாதமில்லாமல், ஒளிவுமறைவு இல்லாமல் நாம் மற்றவர்களுக் குச் சேவைசெய்யவேண்டும்; சேவையைப் பெற வேண்டும். வேதாகமத்தில் இயேசு கிறிஸ்து மூலமாக வெளிப்படுகிற உண்மைகளால், நாம் ஒரே நம்பிக்கையும் விசுவாசமும் உடையவர்களாக மாறியிருக்கின் றோம். அவரைப்பற்றி ஒரே சாட்சியாக அனைவரயும் ஆதாயப்படுத்துகிறோம். திரித்துவ தேவனின் ஒற்றுமைதான் நம் ஒற்றுமைக்கும் ஆதாரமாகும். ஏனென்றால், அவரே நம்மைத் தம் பிள்ளைகளாகத் தத்தெடுத்துள்ளார்.

**வேதாகமத்தில் இயேசு கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளால், நாம் ஒரே நம்பிக்கையும் விசுவாசமும் உடையவர்களாக மாறியிருக்கிறோம்.**

கிறிஸ்தவ ஒற்றுமைகுறித்த வேதாகமப் போதனையை தெளிவுப்படுத்துவதே இந்தப் பாடங்களின் நோக்கமாகும். ஏனென்றால், செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபையினராகிய நமக்கு எப்போதுமே ஐக்கியம் ஒரு சவாலாகத்தான் இருந்துவருகிறது.

கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருப்பது என்பது தேவன் தருகிற ஈவு; அந்த ஈவை நாம் பெற்று, எவ்வாறு வாழவேண்டும் என்பதுபற்றி பல்வேறு ஆழமான கருத்துகளையும் போதனைகளையும் வேதாகமம் வெளிப்படுத்துகிறது. நமக்கு அருளப்பட்டுள்ள அந்த ஐக்கியத்தை நம் வாழ்விலும் சபையிலும் வெளிப்படுத்துவது பற்றிய அந்த ஆழமான கருத்துகளையும் போதனைகளையும் ஆராய்வதே இந்தக் காலாண்டின் நோக்கமாகும்.



டெனிஸ் ஃபோர்டின், மிச்சிகனின் பெரியன் ஸ்பிரிங்ஸில் உள்ள அட்வென்ட்டிஸ்ட் பல்கலைக்கழகத்தின் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் வேதாகமக்கல்லூரியில் இறையியல் பேராசிரியராக இருக்கிறார். 1994இல் அந்த இறையியல் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். பின்னர், அவர் மாஸ்டர் ஆவ் டிவினிடி துறையில் இயக்குனராகவும் (1999-2001), நிர்வாக இணைத்தலைவராகவும் (2000-2004), இறையியல் மற்றும் கிறிஸ்தவ மெய்யியல் துறையில் தலைவராகவும் (2006), சமீபத்தில் அந்தத் துறையின் நிர்வாகத்தலைவராகவும் (2006-2013) பணியாற்றியிருக்கிறார்.